முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1156

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.11.2022, திங்கட்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
   தவமாக வாழும் தேசிகனே
   பெருமைமிக்க ஞானவான்களை படைத்து
   பேருலகை மாற்ற வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 12 ம் நாள் 28.11.2022, திங்கட்கிழமை)
   வரமென அரங்கன் சக்தி வழியே
   வையகத்தில் மாற்றம் நிகழக்கூடும்
3. அறமெனும் அரங்கன் காவல் மூலமே
   அகிலமெல்லாம் பாதுகாப்புப் பெருக நேரும்
   நேர்மைகொண்டு அரங்கன் தொடர்பு கூட்டி
   நிலவுலகில் ஞானம் பயிலும் மக்களெல்லாம்
4. வருமுலகில் ஞானிகளாக தேர்வு செய்யப்பட்டு
   வையகத்தையே மாற்றும் சக்திகளாக மாறுவர்
   மாற்றம் தரவே அரங்கனுக்குள் யான்
   மகா சக்தியாய் நித்தம் நித்தம் ஆக்கம் தந்து
5. தந்துமே அரங்கன் உள்ளிருந்து அற்புதம் நடத்துகின்றேன்
   ஐயமற உலகோர் அரங்கன் குடில்நாடி அனுகி திருவடிதீட்சை பெற்று
   மெய் ஞானவழிகளைத் தொடர்ந்து
   மேலான தர்மத்தைக் காத்து
6. காத்துமே பொருளதவியோடு தொண்டு
   கருணைக்கொண்டு உலகோர் செய்துவந்தால்
   உத்தமமாய் ஞானபலம் எங்கும் கூடி
   உலகமெல்லாம் ஞானிகள் ஆட்சி
7. உயர்வாக அரங்கனால் நிகழக்கூடும்
   தயவாக அரங்கன் தொடர்பு கொண்டு
   தரணியில் வாழும் மக்களெல்லாம்
   தவராஜனால் ஞானிகளாக உருவாக்கப்படும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–